நகரை சுத்தமாக வைத்து இருக்கவேண்டும் என்று மக்களிடத்திலே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா? மேலும் அப்படி அதையும் மீறி நகரை அசுத்தப் படுத்துபவர்கள் மீது தண்டனை தருகின்ற அளவில் மாநகராட்சிச் சட்டத்தையும், டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிட்டி ஆக்ட்டையும் திருத்துகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைப் பொறுத்தவரையில் பொதுநலனைப் பேணிக் காக்கின்ற சங்கங்கள் அந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டு, அவைகளும் ஓரளவிற்கு அந்தப் பணியைச் செய்து வருகின்றன. மாநகராட்சி மன்றமும் துண்டுப்பிரசுரம் மூலமாகவும் விளம்பரம் மூலமாகவும் நகரைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை மக்களிடத்திலே பரப்பி வருகிறது.

பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம்

*4318. திரு. என். பழனிவேல்,

திரு. வி. இராமசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சொந்தக் கட்டிடம் இல்லாத பேரூராட்சிகளுக்கு அரசே அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது சம்பந்தமாக பேரூராட்சிகளிடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சொந்தக் கட்டிடம் இல்லாத 38 பேரூராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது.

திரு. என். பழனிவேல் :- மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு பேரூராட்சிகள் ஏராளமான அளவில் இருக்கின்றன. அவற்றில் 88-க்கு மட்டும் இந்த ஆண்டு புதிதாகக் கட்டிடம் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் மொத்தம் தமிழகத்திலே பேரூராட்சிகளுக்கு சொந்தக் கட்டிடம் இல்லாத ஊர்கள் எத்தனை உள்ளன? அவைகளை முழுவதுமாகக் கட்டி முடிப்பதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா

1990 மே 3]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பேரூராட்சிகள் இல்லை, தமிழ்நாட்டில் 648 பேரூராட்சிகள் உள்ளன. அவைகளில் 560 பேரூராட்சிகளுக்கு சொந்த அலுவலகக் கட்டிடம் இருக்கின்றது. மிச்சம், எஞ்சியுள்ள 88 பேரூராட்சிகளுக்கு புதிய கட்டிடங்கள் இந்த ஆண்டு கட்டப்படும் என்று 24 ஆம் தேதி பதிலுரை அளிக்கிறபோது நான் குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் அலுவலகக் கட்டிடம் இருக்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த 88 கட்டிடங்களுக்கும் ஆகக்கூடிய மொத்த மதிப்பீடு எவ்வளவு ? அது எப்போது ஆரம்பிக்கப்பட்டு எப்போது முடித்துக் கொடுக்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இன்னும் பட்ஜெட்டிலே விளக்கங்கள் கேட்டு, இப்போதுதான் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. 24ஆம் தேதி தான் மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். விரைவாக அந்தப் பணி நடக்கும். இந்த ஆண்டுக்குள்ளாக முடிக்கப்படும்.

ஏடங்கணசாலை பேரூராட்சியை இரண்டாகப் பிரித்தல்

5322. **திரு. சு. பழனிசுவாமி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

> மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எடங்கணசாலை பேரூராட்சியில் இருபதாயிரம் மக்கள் தொகை உள்ளதால் இதை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> தற்பொழுது 1991ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக எவ்வித நிர்வாக மாற்றங்களையும் செய்யக்கூடாதென அரசால் தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளது.